*கவனிக்க.-* 22.08.2025 ஆம் திகதிய 2451 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியவை (தமிழ் மொழி) மூலம் பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2452 - 2025 අගෝස්තු මස 29 වැනි සිකුරාදා - 2025.08.29**

2452 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 718 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 722 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கொழும்பு மாநகர சபை**

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 272 ஆவது அத்தியாயத்தின் 17(1) ஆவது பிரிவின் கீழ் எனக்கு கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கொழும்பு மாநகர சபையின் மாநகர முதல்வர், வேலைகளை, மற்றும் கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரியுமான நான், 2026 ஆம் ஆண்டினுள் இங்கு கீழே முதலாவது அட்டவணையிலும், இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்படும் தினங்களிலும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் விடுக்கப்படுகின்ற கட்டளைகளின்படி கொழும்பு மாநகர சபை அதிகார எல்லைக்குள் இறைச்சிக்காக மிருகங்களை கொல்லுவது, இறைச்சிகளை விற்பனை செய்வது இறைச்சிகளை விற்பதற்காக காட்சிப்படுத்தி வைப்பது மற்றும் இறைச்சிகளை விற்பனை செய்யும் இடங்களை திறந்து வைப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதென இத்தால் மூலம் அறியத்தருகின்றேன்.

வராய் பல்தசார்,
மாநகர முதல்வர்,
கொழும்பு மாநகர சபை.

நகர மண்டபம்.
கொழும்பு 07,
2025, ஓகத்து 08.

**முதலாவது அட்டவணை**

| | | |
|---|---|---|
| சனவரி | 03 | - துருது போயா தினம் |
| பெப்புருவரி | 01 | - நவம் போயா தினம் |
| மாச்சு | 02 | - மெதின் போயா தினம் |
| ஏப்ரல் | 01 | - பக் போயா தினம் |
| மே | 01 | - வெசாக் போயா தினம் |
| மே | 02 | - வெசாக் போயா தினத்திற்கு அடுத்த தினம் |
| மே | 30 | - அதி பொசொன் போயா தினம் |
| யூன் | 29 | - பொசொன் போயா தினம் |
| யூலை | 29 | - எசல போயா தினம் |
| ஓகத்து | 27 | - நிக்கினி போயா தினம் |
| செத்தெம்பர் | 26 | - பினர போயா தினம் |
| ஒற்றோபர் | 25 | - வப் போயா தினம் |
| நவெம்பர் | 24 | - இல் போயா தினம் |
| திசெம்பர் | 23 | - உந்துவப் போயா தினம் |

**இரண்டாவது அட்டவணை**

| | | |
|---|---|---|
| பெப்புருவரி | 04 | - தேசிய சுதந்திர தினம் |
| மே | 01 | - உலக தொழிலாளர் தினம் |
| ஒற்றோபர் | 04 | - உலக மிருக தினம் |

08 - 293

# வரவு செலவுத் திரட்டுகள்

**பிங்கிரிய பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபை சட்டத்துடன் வாசிக்கப்பட வேண்டிய 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதித் தொடரில் 216 ஆம் ஏற்பாடுகளுக்கு அமைய கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு செய்யப்பட்ட பிரதேச சபையின் 2024.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்காக நிதி செயற்பாட்டு அறிக்கை 2024.12.31 ஆந் திகதிக்கு நிதி நிலை அறிக்கை மற்றும் 2024.12.31 ஆந் திகதிக்கு நிதி புழக்க அறிக்கையினை பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக இத்துடன் வெளிப்படுத்துகிறேன்.

கே. எம். டி. எஸ். குமாரசிங்க,
செயலாளர்,
பிரதேச சபை,
பிங்கிரிய.

பிங்கிரிய பிரதேச சபை அலுவலகம்,
2025, ஓகத்து 29.

**அட்டவணை I**

**பிங்கிரிய பிரதேச சபை**

2024, திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டுக்காக நிதி நிலை அறிக்கை

| *சொத்து* | *குறிப்பு* | *2024.12.31* | *2023.12.31* |
|---|---|---|---|
| | | *ரூ. ச* | *ரூ. ச* |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் | 06 | 371,429.578.12 | 369,325,214.85 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| மொத்த | 07 | 5,500,857.56 | 5,774,159.81 |
| கிடைக்க வேண்டியவை | 08 | 22,465,163.17 | 43,411,464.40 |
| பணியாளர் கடன் மற்றும் முற்பணம் | 09 | 12,261,056.07 | 10,378,380.18 |
| முன் செலுத்தியவை | 10 | 639,802.46 | 572,315.60 |
| முதலீடு | 11 | 43,844,978.38 | 39,352,628.99 |
| நிதி மற்றும் நிதிக்கு சமனானவை | 12 | 24,923,956.61 | 12,218,924.87 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 481,065,392.37 | 481,033,088.70 |
| **பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | 14 | 0.00 | 0.00 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 15 | 82,425,959.05 | 87,978,987.43 |
| உரிமைகள் | | 398,639,433.32 | 393,054,101.27 |
| **மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்** | | 481,065,392.37 | 481,033,088.70 |

**அட்டவணை II**

**பிங்கிரிய பிரதேச சபை**

2024, திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டுக்காக நிதிச் செயற்பாட்டு அறிக்கை

| | *குறிப்பு* | *2024.12.31* | *2023.12.31* |
|---|---|---|---|
| | | *ரூ. ச* | *ரூ. ச* |
| **செயற்பாட்டு வருமானம்** | | | |
| அரச பங்களிப்பு - மீள்வருவன | 01 | 68,699,195.78 | 63,553,773.01 |
| வருமானம் | 02 | 82,846,143.23 | 94,027,161.72 |
| **மொத்த செயற்பாட்டு வருமானம்** | | 151,545,339.01 | 157,580,934.73 |
| **செயற்பாட்டு செலவு** | | | |
| மீள்வரும் செலவு | 03 | 1,28,763,535.18 | 116,836,851.28 |
| **மொத்த செயற்பாட்டு செலவு** | | 128,763,535.18 | 116,836,851.28 |

| | *குறிப்பு* | *2024.12.31* | *2023.12.31* |
|---|---|---|---|
| | | *ரூ. ச* | *ரூ. ச* |
| ஆண்டிற்காக செயற்பாட்டு மேலதிகம்/ குறைபாடு | | 22,781,803.83 | 40,744,083.45 |
| மூலதன கிடைப்பனவு | 04 | 0 | 8,545,796.86 |
| மூலதன செலவு | 05 | 20,102,738.00 | 37,503,614.44 |
| **ஆண்டிற்காக மேலதிகம்/ குறைபாடு** | | 2,679.065.83 | 11,786,265.87 |

**அட்டவணை III**

**பிங்கிரிய பிரதேச சபை**

2024, திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டுக்காக நிதி புழக்க அறிக்கை

| | 2023.12.31 |
|---|---|
| | *ரூ. ச* |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட நிதி புழக்கம்** | |
| **சாதாரண செயற்பாட்டினால் கிடைக்கப்பெற்ற மேலதிகம்/ குறைபாடு** | 22,781,803.33 |
| நிதியற்ற நடவடிக்கைகளுக்காக சீரமைப்புக்கள் | |
| தேய்மானம் | |
| பணிக்கொடை ஒதுக்கீடு | |
| முன்னைய ஆண்டிற்கான சீரமைப்புக்கள் | 801,902.95 |
| மூலதன வேறுபாடுகளுக்கு முன்னரான செயற்பாடுகள் மேலதிகம்/ குறைபாடு | 23,583,706.78 |
| மொத்த கடனாளிகள்/ ஏனைய கிடைப்பனவுகள் (அதிகரிப்பு) குறைவு | 14,777,091.34 |
| கடனாளிகள் செலுத்த வேண்டியவை (அதிகரிப்பு) குறைவு | -5,553,028.38 |
| **01. செயற்பாடுகளினால் உருவாக்கப்பட்ட தேறிய நிதிப் புழக்கம்** | 32,807,769.74 |
| முதலீட்டு நடவடிக்கை மூலம் உருவாக்கப்பட்ட நிதிப் புழக்கம் | |
| சொத்துக்களை கையேற்றல்/ அகற்றுதல் | |
| மூலதனச் செலவு | -20,102,738.00 |
| **02. முதலீட்டு நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட தேறிய நிதிப் புழக்கம்** | **-20,102,738.00** |
| நிதி நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட நிதிப்புழக்கம் | |
| மூலதன கிடைப்பனவு | |
| கடன் மீள செலுத்துதல் | 0.00 |
| **03. நிதி நடவடிக்கைகளினால் உருவாக்கம்** | 0.00 |

| | |
|---|---|
| ஆண்டினுள் தேறிய இலக்கங்கள் (1+2+3) | 12,705,031.74 |
| ஆண்டின் ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவை | 12,218,924.87 |
| ஆண்டின் இறுதியில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவை “A” | 24,923,956.61 |

குறிப்பு “A”

| | |
|---|---|
| இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு (பொது) | 23,936,806.91 |
| இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு (பணியாளர் கடன்) | 987,149.70 |

08 - 344

---

## நானாவித அறிவித்தல்கள்

### ஊர்காவற்றுறை பிரதேச சபை

**தீர்மான இலக்கம் ; 10/16.07.2025**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - அதிவிஷேசமானது 1952/16 ஆம் இலக்க 2016.02.02 ஆந் திகதிய அத்தியாயம் 6 பகுதி I இன் முறையே பிரதேச சபை அதிகார எல்லைப்பகுதிக்குள் பொதுச்சந்தைகளை முறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான நியம துணை விதிகளின் பிரகாரம் ஊர்காவற்றுறை பொதுச்சந்தைப் பகுதியிலிருந்து 500m சுற்று வட்டத்திற்குள் ஊர்காவற்றுறை கடற்கரைப்பகுதியில் கடலுணவு கொள்வனவில் ஈடுபடும் நிறுவனங்களிடமிருந்து இடவரி அறவிட வேண்டும் எனவும், ஒரு இடத்தில் ஒரு நாளிற்கு கொள்முதல் செய்வதற்கு ரூபா 1000.00 எனவும், இதனை தற்போது கொள்வனவு செய்யும் கடலுணவில் ஆரம்பவரி அறவீடாக நடைமுறைப்படுத்துவதெனவும் சபையால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

08 - 294

---

### வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147, 148, 149, 150, 152(1), 109(ஈ), 126 ஆம் பிரிவுகளின் பிரகாரமும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் VCKPS/2025/08/02/11 ஆம் இலக்க 2025.08.12 ஆந் திகதிய தீர்மனத்தின் பிரகாரம் 2025 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை கீழே தரப்பட்ட அட்டவணையின் பிரகாரம் வாகனங்கள் மீதான வாடகை அறவிடுவது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

தாஜித்தீன் முகம்மது இம்தியாஸ்,
தவிசாளர்,
வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை.

**பிரதேச சபை வாகனங்களை (சாரதியுடன்) வாடகைக்கு வழங்குவது தொடர்பான
கட்டண அறவீடுகள்**

| *தொ. இல.* | *அறவீட்டின் தன்மை* | *நிலையான கட்டணம் (ரூபா)* |
|---|---|---|
| 01. | மோட்டர் கிரேடர் (ஒரு மணித்தியாலத்திற்கு) | 8000.00 |
| 02. | ஜே. சி. பி. (ஒரு மணித்தியாலத்திற்கு) | 5500.00 |
| 03. | ரோலர் (ஒரு மணித்தியாலத்திற்கு) | 6000.00 |
| 04. | உழவு இயந்திரம் பெட்டியுடன் ஒரு நாளுக்கு (08 மணித்தியாலத்திற்கு) | 8000.00 |

| *தொ. இல.* | *அறவீட்டின் தன்மை* | *நிலையான கட்டணம் (ரூபா)* |
|---|---|---|
| | 8 மணித்தியாலங்களுக்கு பின் வருகின்ற 01 மணித்தியாலத்திற்கு மேலதிக கட்டணம் | 1000.00 |
| 05. | உழவு இயந்திர பவுசர் வீட்டு நீர் விநியோகம் (3000 L) | 1500.00 |
| 06. | உழவு இயந்திர பவுசர் கட்டுமான வேலைகளிற்கு (3000L) (08 மணித்தியாலத்திற்கு) | 8000.00 |
| | 08 மணித்தியாலங்களுக்கு பின் வருகின்ற 01 மணித்தியாலத்திற்கு மேலதிகக் கட்டணம் | 10000.00 |
| 07. | தண்ணீர் பவுசர் தனியார் வேலைக்கு மட்டும் (4000 L) - ஒரு நாளுக்கு (08 மணித்தியாலத்திற்கு)<br>ஒவ்வொரு கிலோ மீற்றருக்கான கட்டணம் | 4000.00 +<br>120.00 |
| 08. | உழவு இயந்திரம் தட்டுடன் - குறிப்பிட்ட ஒரு வேலைக்கு<br>ஒவ்வொரு மணித்தியாலத்திற்கான கட்டணம் | 6000.00 +<br>2500.00 |

08 - 316/1

---

**வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147, 148, 149, 150, 152(1), 109(ஈ), 126 ஆம் பிரிவுகளின் பிரகாரமும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையின் VCKPS/2025/08/02/10 ஆம் இலக்க 2025.08.12 ஆந் திகதிய தீர்மனத்தின் பிரகாரம் மணல், அகழ்வதற்கும் மற்றும் கொண்டு செல்வதற்குமான கட்டணம் அறவிடுவது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

தாஜித்தீன் முகம்மது இம்தியாஸ்,
தவிசாளர்,
வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை.

**மணல் அகழ்தலும் கொண்டு செல்லுதலும்**

| | |
|---|---|
| 01. பரிசோதனைக் கட்டணம் (01 கிலோ மீற்றருக்கு) | 100.00 |
| 02. மணல் அகழ்தலும் கொண்டு செல்லுதலும் (01 கியூப்பிற்கு) | 1000.00 |

08 - 316/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.